COVID Intensive Learning Support Program (CILSP)

Information for parents and carers

# 'COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்டம்'

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

### 'COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்ட'த்தைப் பற்றி

NSW மாநிலத்திலுள்ள பாடப் பயிற்சி (டியூஷன்) மிகவும் தேவைப்படும் ஆரம்ப-நிலை, செகண்டரி மற்றும் சிறப்புத்துவப் பாடசாலை மாணவ-மாணவியருக்கு அப் பயிற்சியை சிறிய குழுக்களில் 'COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்டம்' (COVID Intensive Learning Support Program (CILSP)) அளிக்கிறது.

'NSW கல்வித் திணைக்களம்', 'NSW கத்தோலிக்கப் பாடசாலைகள்' மற்றும் 'NSW சுயாதீனப் பாடசாலைகள் சங்கம்' ஆகியவற்றிற்கிடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும் இந்தத் திட்டம்.

பிரதானமாக COVID-19 பெருந்தொற்றின் காரணமாய் நீண்ட காலமாக வீட்டிலிருந்து பயின்றதனால் தமது கல்வியில் பாதிப்பு ஏற்பட்டிருந்த மாணவ-மாணவிகளுக்கு உதவுவதற்காக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு ஆகிய திறன்களின் மீது இத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

தமது மாணவ-மாணவிகளின் தேவைகளைப் பொறுத்து ஒவ்வொரு பாடசாலையும் அதற்கே உரித்தான திட்டத்தினை உருவாக்கிக்கொள்ளும், மற்றும் விசேடப் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாலர்-பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்களையும் மற்ற கல்வியாளர்களையும் இத் திட்டம் பணியமர்த்துகிறது. சிறு குழுக்களிலான மாணவ-மாணவிகளுக்கு அளிக்கப்படும் இந்தப் பாடங்கள் பாடசாலைக்கு முன்பான, பாடசாலைக்குப் பின்பான அல்லது பாடசாலை நடைபெறும் நேரங்களில் நடத்தப்படலாம்.

### இந்தத் திட்டம் செயல்படும் விதம்

சிறு குழுக்களிலான மாணவ-மாணவிகளுக்கு பாடப் பயிற்சிகளை அளிக்கும் கூடுதல் கல்வியாளர்களைப் பணியமர்த்துவதற்காக 'COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்ட' த்தின் மூலம் பாடசாலைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

சிறு குழுக்களிலான பாடப்-பயிற்சியின் மூலம் எந்தப் பிள்ளைகள் பலனடைவார்கள் என்பதைப் பாடசாலை அதிபருடன் இணைவாகச் செயல்பட்டும், பல விதமான மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தியும் வகுப்பாசிரியர் தீர்மானிப்பார்.

ஒவ்வொரு பிள்ளையும் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதைப் பற்றிப் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடன் கலந்துபேசப்பட்டு போதனா-திட்டம் ஒன்று உருவாக்கப்படும். ஒவ்வொரு பிள்ளையினது முன்னேற்றமும் தவறாமல் தொடர்ந்து சோதிக்கப்பட்டுவரும், அத்துடன் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடனான தொடர்பு பராமரிக்கப்பட்டுவரும்.

### இத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு NSW அரச பாடசாலையிலும் உள்ள மாணவ-மாணவிகளுக்கு ஆதரவுதவி அளிக்கப்பட்டுள்ளது. 2021-ஆம் ஆண்டில் 265,000 மாணவ-மாணவியருக்கு ஆதரவுதவி அளிக்கப்பட்டது.
- சிறு-குழு பாடப் பயிற்சியானது கூடுதல் கல்வியாளர்களால் அளிக்கப்படுகிறது – தேவைப்படும் பொழுது அழைக்கப்படும் (கேஷுவல்) ஆசிரியர்கள், தற்காலிக ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியப் பயிற்சி பெற்றுவரும் மாணவ-மாணவியர்கள் ஆகியோர் இதில் உள்ளடங்குவர். மாணவ-மாணவிகளது தேவைகள் மீது இந்தப் பாடப்-பயிற்சி இலக்கு வைப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்தக் கூடுதல் ஆசிரியர்கள் வகுப்பறை ஆசிரியர்களுடன் நெருக்கமாய்ப் பணியாற்றுவர்.

- எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு ஆகிய திறன்களின் மீது இந்தப் பாடப்-பயிற்சி கவனம் செலுத்தும்.
- இந்தத் திட்டத்தினைப் அமல்படுத்துவதற்கு  விசேடக் கல்வியாளர்கள் மற்றும் நிர்வாகிகளைக் கொண்ட அணி ஒன்று பாடசாலைகளுக்கு உதவும்.
- 2 முதல் 5 வரைக்குமான மாணவ-மாணவிகளைக் கொண்ட குழுக்களுக்கு கூடுதல் போதனை மற்றும் கற்றல் ஆதரவுதவிகளை சிறு குழுப் பாடப் பயிற்சி உள்ளடக்கியிருக்கும். வகுப்புகளில் போதிக்கப்படும் பாடங்களுக்கு வலுவூட்டும் நோக்கத்தில் முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒரு காலத்திற்கு மாணவ-மாணவிகள் தொடர்ந்து போதிக்கப்படுவார்கள்.

### ‘COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்ட’ மும் உங்களுடைய பிள்ளையும்

இந்தத் திட்டம் உங்களுடைய பிள்ளைக்குப் பலனளிப்பதாக இருக்கும் என்று உங்களுடைய பிள்ளையின் ஆசிரியர் கருதினால் அவர் உங்களுடன் தொடர்புகொள்வார்.

இந்தத் திட்டத்தைப் பற்றி நீங்கள் மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், ‘COVID தீவிர ஆதரவுதவிக் கல்வித் திட்ட வலைப்பக்க’ (COVID Intensive Learning Support Program webpage) த்திற்குச் செல்லுங்கள். இத் திட்டத்தைப் பற்றி உங்களுக்கு கூடுதல் தகவல் தேவைப்பட்டால், உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் கலந்துரையாடவும்.

## தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், தயவு செய்து உங்களுடைய பாடசாலை ஆசிரியரை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ உரைபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் 131 450-இல் ‘தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை’யை அழைத்து உங்கள் மொழியில் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குநருக்குக் கொடுங்கள், அதையடுத்து உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.